தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041–மார்கழி 28

2011 ஜனவரி 12, புதன்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்."

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. எம்.எஸ். மாணிக்கம் அவர்கள் 14–12–2010 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. எம்.எஸ். மாணிக்கம் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 முதல் 1984 வரை மிகவும் சிறப்பான முறையில் பணியாற்றினார். இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.)